## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1994 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, விலங்கு மருத்துவர்கள் மற்றும் மருத்துவத் தொழிலர்கள் (திருத்தச்) சட்டம்

---

*(1994, பெப்புருவரி மாதம் 23 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*


**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.**

*1994, பெப்புருவரி மாதம் 24 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்* **வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.**

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

**கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.**

**விலை : சதம் 90**    *தபாற் செலவு : ரூபா 1.00*

1994 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, விலங்கு மருத்துவர்கள் மற்றும் மருத்துவத் தொழிலர்கள் (திருத்தச்) சட்டம்

[1994, பெப்புருவரி மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 37/91

1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, விலங்கு மருத்துவர்கள் மற்றும் மருத்துவத் தொழிலர்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டம், 1994 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, விலங்கு மருத்துவர்கள் மற்றும் மருத்துவத் தொழிலர்கள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) 1956 ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க, விலங்கு மருத்துவர்கள் மற்றும் மருத்துவத் தொழிலர்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது:— 1956ஆம் ஆண்டின் 46ஆம் இலக்கச் சட்டத்தின் 2ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாக பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும்:—

"(ஆ) நற்குணமுடையவராக இருந்தால்;

(இ) இலங்கைப் பல்கலைக்கழகத்தின் அல்லது போதனைப் பல்கலைக்கழகத்தின் விலங்கு மருத்துவமானிப் பட்டத்தை அல்லது பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய வேறு தகைமையைக் கொண்டவராக இருந்தால், அத்துடன்

(ஈ) நான்காம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றைக் கொண்டவராக இருந்தால் ;".

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்குவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் நீக்கஞ்செய்யப்பட்ட (2)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(3) நாலாம் உட்பிரிவின்கீழ் சான்றிதழொன்றைப் பேரவையிடமிருந்து பெற்றுக்கொள்வதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய அனுபவத்தைப் பெறுவதனை இயலச் செய்யும் நோக்கத்துக்காக மட்டும், ஆளொருவர் பேரவைக்கு அதற்கென விண்ணப்பம் செய்ததன்மேல், (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) அத்துடன் (இ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளை அவர் திருப்திசெய்தால் ஆறுமாதங்கள் கொண்டவொரு காலப்பகுதிக்கு விலங்கு மருத்துவர் ஒருவராகத் தற்காலிகமாகப் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

2—ஐ 028869—1,170 (93/09)

(4) விலங்கு மருத்துவர் ஒருவராகத் தற்காலிகமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளவரான எவரேனும் ஆள் இவ்வுட்பிரிவின் கீழ் சான்றிதழொன்றுக்காகப் போவைக்கு விண்ணப்பிக்கின்றவிடத்து, போவையானது, விதித்துரைக்கப்பட்ட ஏதேனுமொரு அல்லது எவையேனும் ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்களில் விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு விலங்கு மருத்துவம், விலங்கு அறுவை மருத்துவம், விலங்கு நோயியல், கால்நடை அபிவிருத்தி தொடர்பிலான துறைகளில் ஏதேனும் தன்மையில் விண்ணப்பகாரர் தொழிலில் ஈடுபட்டிருந்தார் எனவும், அவ்வாறு தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது திருப்திகரமான சேவையை ஆற்றியுள்ளாரெனவும் திருப்திப்பட்டதன் மேல், விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் அப்பயன்படும் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவில் உள்ளது எதுவும் அத்தகைய உட்பிரிவு வலுவுடையதாக வருகின்ற தேதிக்கு முன்னர் விலங்கு மருத்துவத் தொழிலர் ஒருவராக இடாப்பில் எவரேனும் ஆளின் பதிவைப் பாதித்தலோ, பாதிப்பதாகக் கருதப்படுதலோ ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இத்தால் இடப்படுகின்றது:—

"பதிவுசெய்வதற்கான விண்ணப்பம்.

3. விலங்கு மருத்துவர் ஒருவராக அல்லது விலங்கு மருத்துவத்தொழிலர் ஒருவராகப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் பதிவாளருக்கு செய்யப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இத்தால் இடப்படுகின்றது:—

"பதிவுக் கட்டணம்.

4. ஆளெவரும் விலங்கு மருத்துவரொருவராக அல்லது விலங்கு மருத்துவத் தொழிலர் ஒருவராக விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தை அத்தகைய ஆள் செலுத்தினாலன்றிப் பதிவுசெய்யப்படுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவை நீக்கஞ் செய்தல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்படுகின்றது.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இத்தால் இடப்படுகிறது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"தற்காலிகப் பதிவு.

6. (1) போவையானது, தற்காலிகப் பதிவு தொடர்பிலான அதன் பணிகளைப் பதிவாளரிடம் கையளிப்பதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஆளொருவரின் பெயர் இடாப்பிலிருந்து அகற்றப்பட்டும் அதன்பின்னர் அவரது பெயர் புதிய பதிவொன்றின் மூலம் இடாப்பில் உட்புகுத்தப்பட்டுமிருக்குமிடத்து, அத்தகைய புதிய பதிவானது, முன்னைய பதிவைப் புதுப்பித்தலாகக் கருதப்படுதல் ஆகாது. அத்தகைய பதிவுக் கட்டணம் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.".

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் 8 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகள் இடப்படுகின்றன :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் 8 ஆம் பிரிவுகளை மாற்றீடு செய்தல்.

"மறுப்பின்மீது கட்டணத்தை மீளளிப்புச் செய்தல்.

7. பதிவு செய்தலுக்கான விண்ணப்பமொன்று போவையால் ஏற்கப்படாதவிடத்து, விண்ணப்பகாரரால் செலுத்தப்பட்ட கட்டணம், அவருக்கு மீளளிப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

பதிவு ஆயுட்காலத்திற்கு வலிதுடையதாதல்.

8. விலங்கு மருத்துவர் ஒருவரின் அல்லது விலங்கு மருத்துவத் தொழிலர் ஒருவரின் பதிவானது, அவரது பெயர் இடாப்பிலிருந்து போவையினால் அகற்றப்படவில்லையாயின், அது அவரது ஆயுட்காலம் வரை வலிதுடையதாதல் வேண்டும்".

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(2) இடாப்பு போவைக்காகவும், போவையின் சார்பிலும் பதிவாளரினால் பேணப்படுதல் வேண்டும்".

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப்பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"பதிவாளரின் கடமை.

10. பதிவாளரானவர், விலங்கு மருத்துவர்களின் பதிவுக்கான இடாப்பின் அந்தப் பாகத்தில், விலங்கு மருத்துவர்களாக 3 ஆம் பிரிவின்கீழ் விண்ணப்பங்களைச் செய்தவர்களும் போவையினால் எந்த ஆட்களுடைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டனவோ அந்த அத்தகைய ஆட்களின் பெயர்கள், முகவரிகள், அத்துடன் தகைமைகள் என்பவற்றையும் பதிவு செய்தல் வேண்டும்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம், 12ஆம், 13ஆம் 14ஆம் பிரிவுகளை நீக்கஞ் செய்தல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11, 12, 13, அத்துடன் 14 ஆகிய பிரிவுகள் இத்தால் நீக்கஞ்செய்யப்படுகின்றன.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தால் நீக்கம் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"இலங்கை விலங்கு மருத்துவப் பேரவையைத் தாபித்தல்.

15. இலங்கை விலங்கு மருத்துவப் பேரவை என அழைக்கப்படவேண்டிய பேரவை ஒன்று அமைக்கப் படுதல் வேண்டுமென்பதுடன், அது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தலும் வேண்டும் :—

(அ) விலங்கு உற்பத்தி, மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் அல்லது அவரது நியமித்தர் ;

(ஆ) இச்சட்டத்தின் கீழாக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கிணங்க, பதிவுபெற்ற விலங்குமருத்துவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களான எட்டுப் பதிவுபெற்ற விலங்கு மருத்துவர்கள், அத்துடன்,

(இ) பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விலங்கு மருத்துவவியல் துறையின் தலைவர் அல்லது அவரது நியமித்தர்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"பேரவை உறுப்பினர்களின் பதவிக் காலப்பகுதி.

17. (1) பேரவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் எவரும், முன்னதாகவே தமது பதவியை வறிதாக்கினாலொழிய தேர்ந்தெடுக்கப்பட்ட தேதியிலிருந்து நான்கு ஆண்டுகளுக்கு அல்லது அவரது அடுத்தமைபவர் தேர்ந்தெடுக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதிவரை, பதவி வகித்தல் வேண்டும்.

(2) காலக்கழிவு காரணமாகத் தமது பதவியை வறிதாக்குகின்ற தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் எவரும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமையுடையவராதல் வேண்டும்.

(3) பேரவையின் உறுப்பினர் ஒருவர் —

(அ) அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விலங்கு மருத்துவவியல் துறைத் தலைவராக இருந்து, அத்தகைய பதவியை வகிக்காதொழிந்தால் ;

(ஆ) அவர் விலங்கு அபிவிருத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் தலைவர் அல்லது பணிப்பாளர் தவிர்ந்த வேறு உறுப்பினரொருவராக

இருந்து அத்தகைய பதவியைப் போரவையின் தலைவருக்கு முகவரியிட்ட எழுத்தின் மூலம் துறந்தால்;

(இ) அவர் போரவையின் தலைவராக இருந்து அமைச்சருக்கு முகவரியிட்டு எழுத்தின் மூலம் தமது பதவியைத் துறந்தால்; அல்லது

(ஈ) அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஒருவராக இருந்து போரவையின் அடுத்துவரும் மூன்று கூட்டங்களுக்குப் போரவையிலிருந்து லீவு எடுக்காது தாமே வருகைதராதிருந்தால்,

பதவியை வறிதாக்குதல் வேண்டும்.

(4) போரவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் இறக்கும் அல்லது பதவியை வறிதாக்கும் பட்சத்தில், 16 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, வேறெவரேனும் ஆள் அத்தகைய ஆளின் இடத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுதலும், அத்துடன் அத்தகைய உறுப்பினரின் பதவிக்காலத்தின் எஞ்சிய பாகத்தின்போது பதவி வகித்தலும் வேண்டும்.".

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கான காப்பு வாசகத்தை நீக்கஞ் செய்வதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(3) போரவையின் கூட்டமெதிலும் ஆகக்குறைந்தது ஐந்து உறுப்பினர்களேனும் சமுகமளித்திருந்தாலன்றித் தொழில் எதுவும் கொண்டுநடாத்தப்படுதலாகாது" அத்துடன்

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் "எவரேனும் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல் அல்லது அவரது பெயர் குறித்த நியமனம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எவரேனும் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவானது அப்பிரிவில் உள்ள "15 (1) ஆம் பிரிவினதும் அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "15 ஆம் பிரிவினதும் அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு இத்தால் நீக்கம் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"போவையின் நிதியங்கள்

21. பதிவு செய்வதற்காகப் பதிவாளருக்கு செலுத்தப்படும் எல்லாக் கட்டணங்களும் போவையின் நிதியங்களில் வரவு வைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், போவையின் பணியாட்டொகுதியினரின் ஊதியமும் இச்சட்டத்தின் கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும், கடமைகளை நிறைவேற்றுவதிலும் போவையால் உறப்படும் எல்லாச் செலவுகளும் அத்துடன் ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக உறப்படும் எல்லாச் செலவுகளும் அத்தகைய நிதியத்திலிருந்து செலுத்தப்படுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவை நீக்கஞ் செய்தல்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவை நேரே உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு இடப்படுவதுடன் அது அச் சட்டவாக்கத்தின் 25அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"போவை பல்கலைக் கழகத்திற்கு விதப்புரைகளைச் செய்தல்.

25 அ. போவையானது போதனைப் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் கற்கைநெறிகளை மதிப்பீடு செய்வதற்கும் இலங்கையில் விலங்கு மருத்துவக் கல்வித்துறை தொடர்பிலான கருமங்கள் மீது பல்கலைக்கழகத்திற்கு காலத்திற்குக்காலம் விதப்புரைகளைச் செய்வதற்கும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "பதிவு செய்யும் அலுவலர் அல்லது பதிவாளர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பதிவாளர்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ; அத்துடன்,

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "பதிவு செய்யும் அலுவலர் அல்லது பதிவாளர்" என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் "பதிவாளர்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"மேலதிக தகைமையை உட்புகுத்துதல்.

29. இடாப்பில் குறித்துரைக்கப்பட்ட அவரது தகைமையுடன் மேலதிகமாக வேறேதேனும் தகைமையை பெற்றுள்ளவரான பதிவுபெற்ற விலங்கு மருத்துவர் ஒருவர், அத்தகைய மேலதிகத் தகைமையானது, போரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளவிடத்து இடாப்பிலுள்ள அவரது தகைமையுடன் அத்தகைய தகைமை சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவு, பின்வரும் பந்திகளை அவ் உட்பிரிவின் இறுதியில் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(ஏ) ஏதேனும் விலங்கிற்கு குறிசுடுதலும், பச்சை குற்றுதலும்,

(ஐ) ஏதேனும் விலங்கின் சிறு காயங்களுக்கு மருந்து கட்டுதல்,".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவைத் திருத்துதல்.

21. முதன்மைச் சட்டவாக்கத்ன் 34 ஆம் பிரிவு "இலங்கைப் பல்கலைக் கழகம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இலங்கைப் பல்கலைக்கழகம் அல்லது பேராதனைப் பல்கலைக்கழகம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவைத் திருத்துதல்.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) "பதிவு செய்யும் அலுவலர் அல்லது பதிவாளர்" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் "பதிவாளர்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) "அவரது பதிவைப் புதுப்பித்தல்" என்னும் சொற்களை விட்டுவிடுதல் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவைத் திருத்துதல்.

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவு "இருநூற்றைம்பது" அத்துடன் "ஐந்நூறு" என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே "ஐந்நூறு" அத்துடன் "ஆயிரம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவைத் திருத்துதல்.

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

25. முதன்மைச் சட்டவாக்கத்தின 41 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"பொருள் கோடல்.

41. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி —

"விலங்கு அபிவிருத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர்" என்பது விலங்கு அபிவிருத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின்

பணிப்பாளராக இருப்பதற்கென அல்லது பணிப்பாளராகச் செயலாற்றுவதற்காக நியமிக்கப்பட்டவரான ஆள் என்று பொருளாகும்;

"அமைச்சர்" என்பது விலங்கு அபிவிருத்தி மற்றும் சுகாதாரம் என்னும் விடயம் குறித்தொதுக்கப்பட்டுள்ள, அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்டுள்ளவரான அமைச்சர் எனப் பொருளாகும்;

"விதித்துரைக்கப்பட்ட" என்பது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்பட்ட என்று பொருளாகும்;

"தலைவர்" என்பது பேரவையின் தலைவர் என்று பொருளாகும்;

"பதிவாளர்" என்பது பேரவையினால் நியமிக்கப்பட்டவரான பதிவாளர் என்று பொருளாகும்.

"பதிவு பெற்ற விலங்கு மருத்துவத் தொழிலர்" என்பது இச்சட்டத்தின் கீழ் விலங்கு மருத்துவத் தொழிலர் ஒருவராகப் பதிவு செய்து கொண்ட ஆளொருவர் என்று பொருளாகும்;

"பதிவு பெற்ற விலங்கு மருத்துவர் என்பது இச்சட்டத்தின் கீழ் விலங்கு மருத்துவராகப் பதிவு செய்தவரான ஆளொருவர் என்று பொருளாகும்;

"பேரவை" என்பது இச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட இலங்கை விலங்கு மருத்துவப் பேரவை என்று பொருளாகும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

26. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,859 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், 255, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.